

# abc123

உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்திற்கான இலகுவான படிமுறைகள்

## ஒவ்வொரு நாளும் வாசியுங்கள்.

## ஒன்றுசேர்ந்து வாசியுங்கள்.

## வாசித்தலை சுவாரசியமான-தாக்குங்கள்!




## வாசித்தலை சுவாரசியமானதாக்க 10 வழிமுறைகள்

1. உங்களைச் சுற்றி காணப்படும் சொற்களையும் சொற்றொடர்களையும் சுட்டிக்காட்டுங்கள் - சீரியல் பெட்டிகள், வீதி அடையாளங்கள், விளம்பரங்கள், மற்றும் புத்தகங்களில் உள்ளனவற்றை.
2. தாமாகவே புத்தகங்களை தேர்ந்தெடுக்க உங்கள் பிள்ளைகளை அனுமதியுங்கள்.
3. உங்கள் பிள்ளை விரும்பக்கூடும் சிறுவர்களுக்கான சஞ்சிகைகளை நாடுங்கள்.
4. ஆர்வமூட்டக்கூடிய வகையில் வாசியுங்கள் - வெவ்வேறு குரல்களை பயன்படுத்தல், கைப்பொம்மைகளை உருவாக்குதல், கதையை நடித்துக்காட்டுதல் போன்றவைமூலம்.
5. நீங்கள் சிந்திக்கும் ஒரு புதிர்ச்சொல்லிற்கான தடயங்களைக் கொடுங்கள். நீங்களும் உங்கள் பிள்ளையும் ஒன்றுசேர்ந்து செய்தவொரு செயலுடன் சம்பந்தப்பட்டவொரு சொல்லைத் தேர்ந்தெடுங்கள்.
6. ஒப்பீடு விளையாட்டுகளை விளையாடுவதற்கு அட்டைகளை உருவாக்குங்கள் - எழுத்துகளையும் சொற்களையும் படங்களுடன் ஒப்பிடுங்கள். சொற்களை அமைத்தல், மற்றும் ஓரட்டையிலுள்ள சொற்களை படித்தல் போன்றவற்றை உள்ளடிக்கிய ஆட்டப்பலகை விளையாட்டுகளை விளையாடுங்கள்.
7. உங்கள் சமையலறையினை உங்கள் வாசிப்பு மையத்தின் பகுதியாக்குங்கள். பிள்ளைகள் சொற்களையும் குறுகிய வசனங்களையும் அமைக்கத்தொடங்குவதற்கு உதவ, குளிர்ச்சாதனப்பெட்டியில் பொறுத்தக்கூடிய காந்தங்களை வழங்குங்கள்.
8. உறவினர்களையும் நண்பர்களையும் புத்தகங்களை அன்பளிப்பாக கொடுக்குமாறு ஊக்குவியுங்கள்.
9. ஞாபக விளையாட்டுகளை விளையாடுங்கள். பொருட்களை நிலத்தில் வைத்து அவற்றை ஒரு நிமிடத்திற்கு பார்வையிடுமாறு உங்கள் பிள்ளையிடம் கூறிவிட்டு, பின்பு அவற்றை மறையுங்கள். உங்கள் பிள்ளையினால் இயன்றளவு பொருட்களை பெயரிடும்படி கோருங்கள்.
10. கதைகள், கவிதைகள், செய்தித்தாள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் சித்திரக்கதைப்புத்தகங்கள் போன்ற சகலவற்றையும் வாசியுங்கள்.

English
Français
French
عربي
Arabic
繁體中文
Traditional Chinese
简体中文
Simplified Chinese
فارسی
Farsi
हिन्दी
Hindi
한국어
Korean
Português
Portuguese
ਪੰਜਾਬੀ
Punjabi
Español
Spanish
Tagalog
Tagalog
தமிழ்
Tamil
اردو
Urdu
Tiếng Việt
Vietnamese

**www.ontario.ca/abc123** இல் வாசிப்பதற்கான உத்திகளை 14 மொழிகளில் காணுங்கள்.

Tamil

ஒவ்வொரு மாணவரையும் சென்றடைவதே எமது நோக்கம்

Ontario

abc123

உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்திற்கான இலகுவான படிமுறைகள்



# உங்கள் பிள்ளைக்கு வாசித்தலுடன் உதவுவதற்கான உத்திகள்

## ஒவ்வொரு நாளும் வாசியுங்கள்.

## ஒன்றுசேர்ந்து வாசியுங்கள்.

## வாசித்தலை சுவாரசியமான-தாக்குங்கள்!

வாசித்தல், எழுதுதல், மற்றும் கணிதத்தினைப்பற்றிய மேலதிக உத்திகளை பெறுவதற்கு:

**www.ontario.ca/abc123**

### பாலர் வகுப்பு முதல் தரம் 3 வரை

1. அணைத்துக்கொண்டு வாசியுங்கள். ஒன்றாகவிருக்கும் அமைதியான நேரங்கள் பிணைப்பை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களாகும்... அத்துடன் வாசிப்பதற்குமாகும். உங்கள் குரலில் சிறிது குதூகலத்தைக் கொண்டு வாருங்கள். உங்கள் பிள்ளையை ஒன்றுவிட்டுவரும் பக்கங்களை வாசிக்குமாறு ஊக்குவியுங்கள். வாசிக்கும் சமயத்தில், புதிய சொற்களையோ கருத்துகளையோ விளக்கப்படுத்துங்கள்.

2. வாசித்தலில் ஒரு முன்மாதிரியாக இருங்கள். நீங்கள் வாசிப்பதை உங்கள் பிள்ளைகள் காணும்பொழுது, அவர்கள் உங்களை பின்பற்ற விரும்புவார்கள். வாசித்தல் சுவாரசியமானதென்றும், ஆர்வமூட்டுவதென்றும், பெரியோர்கள் செய்வதொன்றென்பதையும் அவர்கள் உணர்வதற்கு தாமதமாகாது.

3. இன்றைய நூலகங்கள் ஆராய்ச்சி செய்வதற்குரிய உலகங்களாகும். உங்கள் நூலகம் சிறந்த வளங்களையும், சிறியோர்களுக்கான வாசிப்பு வளையங்கள், பெரிய பிள்ளைகளுக்கான வீட்டுவேலை கழகங்கள் போன்ற சிறப்பு மிக்க திட்டங்களையும் கொண்டுள்ளது.

4. விளையாட்டுகள் சிறந்த கற்பதற்குறிய கருவிகளாக இருக்கமுடியும். ஆட்டப்பலகை விளையாட்டுகள் அல்லது சொல் பிங்கோ, ஞாபக மற்றும் எதுகை அட்டைகள் போன்ற அட்டை விளையாட்டுகள், சொற்கள், எழுத்து ஒலிகள், மற்றும் வாசித்தலைப்பற்றி கற்பதற்கான சுவாரசியமான வழிகளாக அமையக்கூடியன.

### தரங்கள் 4 முதல் 6 வரை

1. உங்கள் பிள்ளையுடன் வாசிப்பதைத் தொடருங்கள். பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுவதற்கு வயதெல்லையொன்று இல்லை - அல்லது உங்கள் பிள்ளைகளை உங்களிற்கு வாசித்து காட்டுவதற்கு இசையுங்கள். சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், புத்தகங்கள், கவிதைகள், சித்திரக்கதைப் புத்தகங்கள் போன்ற சகலவற்றையும் வாசியுங்கள்.

2. ஆர்வமூட்டும் செயல்களையும் பொழுது போக்குகளையும் பயன்படுத்துங்கள். போட்டி விளையாட்டுகள், கைத்திறன் வேலைகள் போன்ற தங்களுக்கு மிகவும் ஆர்வமூட்டும் விடயங்களைப்பற்றி வாசிப்பதற்கு பிள்ளைகள் கூடுதலாக விரும்புவார்கள். அது சித்திரக் கதைப்புத்தகம், சஞ்சிகை அல்லது வரைபடம் கொண்ட புத்தகமாகவிருப்பின் கவலைப்பட வேண்டாம். எல்லா வாசிப்பும் நன்மையானதாகும்; அத்துடன் அவர்கள் வளர வளர ரசனைகள் மாறுபடும்.

3. உங்கள் பிள்ளை வாசிக்கும் அதே புத்தகங்களில் சிலவற்றை நீங்களும் வாசியுங்கள். உங்கள் நூலகரிடம் அல்லது பிள்ளையின் ஆசிரியரிடம் ஆலோசனைகள் கேளுங்கள். கதாபாத்திரங்கள், கதைகள், அல்லது கருத்துகளைப்பற்றி சிறந்த உரையாடல்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.

4. உங்கள் பிள்ளைகள் வாசிப்பதைப்பற்றி உங்களுடன் உரையாடுமாறு கோருங்கள். வாசிப்பது எதைப்பற்றியதென்றும், அதில் என்ன மிகவும் விரும்பத்தக்கதென்றும் கேளுங்கள். அதனை வர்ணிக்கும்படி கேளுங்கள்.



© ஒன்டாரியோவிற்கான குவீன் அச்சகம், 2008 • ISBN 978-1-4249-7558-7 (PDF)